**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
தினசரி 6-30 இரவு 9-45
சனி ஞாயிறு 2-30
தியாகராஜ பாகவதர்
நடித்த
**திருநீலகண்டன்**
(புதிய கொப்பி)
தினசரி 4-30 மட்டும்
DEATH OF A
GUN FIGHTER

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p. m.
Ken Clarke, Helga Lime
in
MISSION BLOODY
MARY
(Technicolor-adults only)
தினசரி 2-00 இரவு 9-45
எம். ஜி. ஆர் - சாவித்திரி
நடித்த
**மகாதேவி**

**யாழ் தியேட்டர்**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - பானுமதி
நடித்த
**மலைக்கள்ளன்**

**நியூ கலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி. ப. 2-30
ராஜன் - ஜெமினி
சௌகார் ஜானகி நடித்த
**சக்கரம்**

**RAJAH JAFFNA**
Daily 10-30 a. m., 4-00, 7-00 & 9-45 p. m.
Steve Mcqueen - James Garner
in
**THE GREAT ESCAPE**
(Scope & Color)

**ராணி** சிவாஜி கணேசன் - ஜெயலலிதா
[யாழ்ப்பாணம்] சுந்தரராஜன் — பாலாஜி
தினசரி 2-30 6-30 மற்றும்பலர் நடித்த
ஜெயந்தாவின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)
தினசரி காலை 10-30 இரவு 10-00
**நான் யார் தெரியுமா?**

**வின்ஸர்** ரவிச்சந்திரன் - கே. ஆர். விஜயா
[யாழ்ப்பாணம்] நாகேஷ் - டி. கே. பகவதி
தினசரி 4 காட்சிகள் நடித்த
**சபதம்**

**லிடோ** (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30
ரஞ்சன் — அஞ்சலிதேவி — வீரப்பா
ஈ. வி. சரோஜா — தங்கவேலு
நடித்த
**நீலமலைத் திருடன்**
(புதிய கொப்பி)

2வது வாரமாக காட்சியளிக்கிறது
**வெலிங்டன்** (யாழ். நகர்) **லிடோ**
தினசரி பி. ப. 2-30 தினசரி காலை 10-00
மாலை 6-30 இரவு 10-00 மட்டும்
சனி, ஞாயிறு காலை 10-30
மற்றும்
**கெப்பிட்டல்** (கொழும்பு) **பிளாஸா**
திரைகளில்
★ சிவாஜி ★ ஜெயலலிதா
★ பாலாஜி ★ நிர்மலா
★ சோ ★ கருணாநிதி ★ தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்தது.
ஜேயார் மூவீஸ்
**எங்க மாமா**
[ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம்]


## 5வது தடவையாக நடந்த கூட்டம்

யாழ்ப்பாணம், சனி
கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய பெற்றோர் ஆசிரிய சங்க புனரமைப்பு கூட்டம் ஐந்தாவது தடவையாக நடந்துள்ளது. முதலாவது கூட்டம் கோரமின்மையால் ஒத்திவைக்கப்பட்டது. இரண்டாவது கூட்டம் முறையற்றதென ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதால் பின்போடப்பட்டது. மூன்றாவது கூட்டத்தில் பெற்றோரல்லாதவர்களும் சமூகமளித்ததால் பின்போடப்பட்டது. நான்காவது தடவையாக நடந்த கூட்டத்தில் பெற்றோரல்லாதவர்கள் உபதலைவராகவும் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதாக வட்டார வித்தியாதிபதிக்குமுன்னாள் தலைமை ஆசிரியரும் திரு சி செல்லத்துரையினால் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அக்கமிட்டி கலைக்கப்பட்டது. ஐந்தாவது தடவையாக நடந்த கூட்டத்தில் புதிய கமிட்டி தெரிவு செய்யப்பட்டது.

புதிய கமிட்டி விபரம் வருமாறு: தலைவர் பண்டிதர் பொ. சந்நதியினார். செயலாளர் திரு வி. நடராசா, பொருளாளர் திரு எஸ் கனகசிங்கம், 6 பேர் கமிட்டி உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

உதைபந்தாட்டம்

## அரை இறுதி மோதல்

யாழ்ப்பாணம், சனி
யாழ். உதைபந்தாட்டச் சம்மேளனம் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அரை இறுதியாட்டம் இன்றும் நாளையும் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய அரை இறுதி மோதலில் பாஷையூர் சென் அன்ரனிஸ் கழகமும் குருநகர் பாடும்மீன் கழகமும் மோதுகின்றன.

நாளைய மோதலில் யாழ்ப்பாணம் ஜிறீநிஸ் கழகமும் தெல்லிப்பளை ஜெருஸ்லெம் கழகமும் மோதுகின்றன. (தே நி)


**வெல்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
**நீலவானம்**

**சாந்தி** சுன்னாகம்
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
**குடியிருந்த கோயில்**
சனி 4-15
THOMAS
CROWN AFFAIR
வயது வந்தவர்களுக்கு

**பவானி சினிமா**
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - சாவித்திரி
நடித்த
**பரிசு**

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Sat. Sunday 10-30
Peter Craves
Martin Landay
in
MISSION IMPOSSIBLE
Vs. THE MOB



## கேள்வி விளம்பரம்

சுன்னாகம் பட்டணசபைத் தலைவரால் 'சுன்னாகம் இந்து மயானத்தில் கொட்டகை ஒன்று அமைத்தல்' எனும் வேலைக்கான கேள்விகள் ஒப்பந்தகாரரிடமிருந்து 28-6-72-ம் திகதி மு. ப. 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 27-6-72-ந் திகதி பி. ப. 2-30 வரை ரொக்கப் பணமாக ரூபா 50/-ம் பத்திரப்பணமாக ரூபா 5/-ம் செலுத்துவதன் மூலம் வழங்கப்படும்.

ஏனைய விபரங்களை இப் பட்டணசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்
தலைவர்
பட்டணசபை, சுன்னாகம்
பட்டணசபை அலுவலகம்
சுன்னாகம் 14-6-72
4246


## பிராமி எழுத்து நாணயம்

சாவகச்சேரி, வெள்ளி
வல்லிபுரத்தில் ஆரம்ப வெளியாய்வு நடாத்திய தெல்லிப்பழை மத்திய மகாவித்தியாலய புவியியல் மன்ற ஆய்வுக்குழுவினருக்கு புராதன பிராமி எழுத்துக்களைக் கொண்ட நாணயமொன்று கிடைத்துள்ளது. வல்லிபுரத்தின் வரலாற்றை அறிவதற்கு இந்த நாணயம் பெரிதும் துணைசெய்யும் என ஆய்வுக்குழுவின் தலைவர் திரு. சபா. ஜெயராசா தமது நிருபரிடம் கூறினார். இந்த நாணயம் இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்குமென்றும் இவர் கருதுகின்றார்.

இம்மன்றத்தினர் இன்னும் சில நாட்களில் நிலத்தை அகழ்ந்து ஆராய்ச்சி செய்ய விரும்புவதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாணயம் தெல்லிப்பழை மத்திய மகாவித்தியாலயத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பலர் இதை பார்த்துச் செல்கின்றனர்.

......

## பெயர் மாற்றம்

கொழும்பு, வெள்ளி
ஹாடி உயர் தொழில் நுட்பவியல் கல்லூரியிலும் கட்டுபத்தை வளாகத்திலும் இதுவரையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில் நுட்பவியலாளர் பயிற்சி தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா பயிற்சி எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இப் பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு தொழில் நுட்பவியல் டிப்ளோமா வழங்கப்படும்.

பயிற்சியாளர்களினால் கோரப்பட்ட இம் மாற்றத்தினை கல்வி அமைச்சு அங்கீகரித்துள்ளது.

...

## சமரச முயற்சி

குருநகர் வெள்ளி
கடந்த இரண்டு தினங்களாக குருநகர் பகுதியில் இரு சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டுவந்த கோஷ்டிச் சண்டையை நிறுத்துவதற்கான சமரச முயற்சிகளை இப்பகுதியில் உள்ள மாநகரசபை உறுப்பினர்கள் சிலர் செய்துவருகின்றனர். இக்கோஷ்டிச் சண்டையை நிறுத்துவதற்கு 2-ம் வட்டார உறுப்பினர் திரு எம். எஸ். பேனின்பநாயகம் இரு சமூக வாலிபர்களிடையேயும் சமரசம் ஏற்படுத்த முயன்றுவருகிறார்.


## வரி விளம்பரம்

சாப்டிங்ஸ் 1 தொடக்கம் 7 அங்குலம் வரைக்கும் (M. S. Shaftings) வேண்டிய அளவுகளில் மலிவாகக் கிடைக்கும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5056

விற்பனைக்கு
ஆபர்வாடி புதுவருட இராசிப்பலன் ரூபா 1/50. விற்பனையாளர்கள்: கொழும்பில் கீழ்க்காணும் இடங்களில் உண்டு. ஸ்ரீ அவ்வை பப்ளிகேசன்ஸ், ஐந்துலாம்புசந்தி, இருக்காயி, கொள்ளுப்பிட்டி. 5076

மாத்தளன்-கண்டி வீதியில் அரை ஏக்கர் காணி வீட்டுடன் மற்றும் நல்ல தண்ணீர் கிணறு வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பாலராசா, 163, கோவில் வீதி நல்லூர். 5094

மீசாலை வேம்பிராய்ச் சந்தியில் ஆலடித் தோட்டம் ஒரு ஏக்கர் அத்துடன் வீடு கட்டவும் தோட்டஞ்செய்யவும் ஏற்ற பத்துப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். சி. பாலசிங்கம், 18A, அம்மன் வீதி, சுத்தர்மடம் யாழ்ப்பாணம். 4803

தேவை
யாழ்ப்பாணக்குடா நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்படும் ஓர் ஆங்கில வைத்திய நிலையத்திற்கு இளைப்பாறிய ஆங்கில மருத்துவர் (Retired Apothicary) தேவை 20-6-72க்கு முன். கீழ்க்காண் விலாசத்தில் நேரில் வந்து காணவும். டாக்டர் ப. சுப்பிரமணியம், கிருஷ்ணபவனம், மருத்துவ துறை வீதி, கல்வியங்காடு. 5100

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல தனியார் வர்த்தகக் கல்லூரிக்கு ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல் (ஆங்கிலம்) ஆசிரியர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடனும் தகைமை சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 4801, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4801

உல்லாசப்பிரயாணிகள் ஹோட்டலுக்கு அனுபவம் வாய்ந்த சமையல்காரர்களும், பரிமாறுபவர்களும் தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளமும் தங்க இடமும் சாப்பாடும் விடுதி வசதி சேவைக் கட்டணமும் வருவோரிடமிருந்து இதர சந்தோஷமும் பெறக்கூடியதுமுண்டு: 'டிப்ஸ்' பாஷையும் அனுசரித்து அனுபவ முறைப்படி வேதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்க:- மனேஜர், பார்க்கோர்ட், பிரதான வீதி, யாழ்ப்பாணம் மனேஜிங் டிரக்டர், உல்லாசப் பிரயாணிகள் ஹோட்டல் லிமிட்டெட், 15-6-72 4802


## சத்தியப் பிரமாணம்

நெல்லியடி, வெள்ளி
உடுப்பிட்டி பருத்தித்துறை தொகுதியில் உள்ள விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள் புதிய குடியரசு அரசியல் அமைப்புக்குக் கீழ் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

புலோலி விவசாய விஸ்தரிப்பு மத்திய சந்தோதிக் காலம் விவசாய அதிகாரி திரு. பி. மாணிக்கவாசகர் தலைமையில் மேற்படி வைபவம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

